[2002 ஏப்ரல் 11

2. தகவல் கோரல்

(அ) தமிழ் ஈழ விடுதலைப் புலிகள் இயக்கத் தலைவர் திரு. பிரபாகரனை இந்தியாவிற்குக் கொண்டு வந்து விசாரணை செய்வது.

திரு. சி. ஞானசேகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவைக்கு ஓர் அறிவிப்பு. (குறுக்கீடுகள்).

திரு. சி. ஞானசேகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைதிப் பூங்காவாக இருந்த தமிழகத்தில் விடுதலைப் புலிகள் ஊடுருவி 1991 ஆம் ஆண்டு எங்களுடைய இளைய தலைவன் முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி அவர்கள் படுகொலை செய்யப்பட்டு, அதிலே முக்கியக் குற்றவாளியாக அறிவிக்கப்பட்டு, நீதிமன்றத்திலே வழக்கு ஏற்கெனவே split செய்து N.B.W. எல்.டி.டி.ஈ. தலைவர் பிராபாகரன் மீது பென்டிங்கிலே இருந்து கொண்டிருக்கிறது. நம்முடைய தமிழகத்திலே, நீதிமன்றத்திலே, இதுவரை ஒளிவு வாழ்க்கை வாழ்ந்து கொண்டிருந்த-he was absconding actually - கடந்த 10 ஆண்டுகளாக தலைமறைவு வாழ்க்கை வாழ்ந்து கொண்டு இருந்த பிரபாகரன் அவர்கள் நேற்று சர்வதேச பத்திரிகையாளர்களை எல்லாம் சந்தித்து, இலங்கை கிளிநொச்சியிலே அவர்கள் வெளிப்படையாக வந்து பத்திரிகைக்கு பேட்டி கொடுத்திருக்கிறார்கள். ஆகவே நம்முடைய தமிழகத்தில் நீதிமன்றத்திலே இருக்கக்கூடிய N.B.W.-வை நிறைவேற்றி அவர்கள் மீது இருக்கக்கூடிய வழக்கை நடத்தி முடிப்பதற்காக தமிழக அரசு, மத்திய அரசை வலியுறுத்தி Interpol மூலமாக அந்த பிரபாகரனை தமிழகத்தில் இருக்கக்கூடிய நீதிமன்றத்திற்குக் கொண்டு வருவதற்கு அரசு ஆவன செய்யுமா என்று தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: கவனத்திற்குக் கொண்டு வந்திருக்கிறீர்கள். அரசுத் தரப்பிலே என்ன என்று கேட்டுச் சொல்கிறேன். (குறுக்கீடுகள்) திரு. பழனிசாமி, சொல்லுங்கள் என்ன என்று.

(ஆ) சென்னை, பெசன்ட் நகர், பாரத ஸ்டேட் வங்கியில் நடைபெற்ற கொள்ளை.

***திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நேற்று பெசன்ட் நகரின் பேங்கிலேயிருந்து கொள்ளை அடிக்கப்பட்டு இருக்கிறது...